# அக்டோபர் – 26 – வெள்ளி

**புனித அவரிஸ்டாஸ்**

**“நேர்மையானது எதுவென நீங்கள் தீர்மானிக்காமல் இருப்பதேன்?” – லூக்கா 12:57**

## முதல் வாசகம் : எபேசியர் 4 : 1 – 6

சகோதர சகோதரிகளே!, ஆண்டவர் பொருட்டு கைதியாக இருக்கும் நான் உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன் நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்பவாழுங்கள். முழு மனத்தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி,அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள்.நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டுவாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே. தூய ஆவியும் ஒன்றே.அவ்வாறே ஆண்டவர் ஒருவரே. நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே. திருமுழுக்கு ஒன்றே.எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர்.

**பதில்பாடல் :** கடவுள் முகத்தைத் தேடுவோரின் தலை முறையினர் இவர்களே.

## நற்செய்தி : லூக்கா 12 : 54 - 59

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்துக் கூறியதாவது, “மேற்கிலிருந்து மேகம் எழும்புவதை நீங்கள் பார்த்ததும் மழைவரும் என்கிறீர்கள் அது அப்படியே நடக்கிறது. தெற்கிலிருந்து காற்று அடிக்கும்பொழுது மிகுந்த வெப்பம் உண்டாகும் என்கிறீர்கள் அதுவும் நடக்கிறது. வெளிவேடக்காரரே, நிலத்தின் தோற்றத்தையும்இ வானின் தோற்றத்தையும் ஆய்ந்து பார்க்க அறிந்திருக்கும்போது, இக்காலத்தை நீங்கள் ஆய்ந்து பாராமல் இருப்பது எப்படி? “நேர்மையானது எதுவென நீங்கள் தீர்மானிக்காமல் இருப்பதேன்? நீங்கள் உங்கள் எதிரியோடு ஆட்சியாளரிடம் போகும்போது, வழியிலேயே உங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள். இல்லையேல் அவர் உங்களை நடுவரிடம் இழுத்துக்கொண்டுபோக, நடுவர் உங்களை நீதிமன்ற அலுவலரிடம் ஒப்புவிப்பார் நீதிமன்ற அலுவலர் உங்களைச் சிறையிலடைப்பார். கடைசிக்காசுவரை நீங்கள் திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேறமாட்டீர்கள் என உங்களுக்குச் சொல்கிறேன்.“ என்றார்.

**தியானம்:** நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் நடைபெறும் சம்பவங்களின் அடிப்படையில் எதிர்கால வாழ்வைக் குறித்து தீர்மானங்களையும், முடிவுகளையும் எடுப்பது வழக்கம். அவை சிலவேளைகளில் எம்மைச் சார்ந்ததாக அல்லது எமது குடும்பத்தைச் சார்ந்ததாக மட்டுமல்ல, சமூகத்தை மற்றும் வாழ்வுரிமையைச் சார்ந்ததாகவும் இருக்கின்றன. ஆயினும், அவை எக்காலத்திலும் பொருத்தமானதாக அல்லது நாம் எதிர்பார்த்தவாறு நன்மையாக முடிவடைந் திருக்கின்றனவா? எனினும், எமக்கு நித்தியத்திற்கும் தேவையான விண்ணக வாழ்வைக் குறித்து சரியான பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்கு இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவர் இயேசு அழைப்பு விடுக்கின்றார். இன்றைய நற்செய்தியை நாம் ஆழமாக உற்றுநோக்கினால் இவ்வுலகில் இயற்கையாக இடம்பெறும் மாற்றங்களைக் குறித்து புவியியல் ரீதியாக காலநிலையை அல்லது பருவ காலத்தின் தன்மையை நாமறிந்து வைத்திருக்கின்றோம் என்பது தெளிவாகின்றது. ஆயினும், அவை அனைத்தையும் படைத்து ஆட்சிசெய்து வருகின்ற ஆண்டவனின் வல்லமையை நாம் அறியாது வாழுகின்றோமா? என எமது அறியாமையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. அப்படியாயின் எமதுவாழ்வில் நாமெடுக்கின்ற சகல தீர்மானங்கள் எதுவாகவிருப்பினும் அவையனைத்தும் எம்மைப் படைத்து வழிநடாத்துகின்ற எல்லாம் வல்ல பரலோக தகப்பனது சித்தத்திற்கும், திட்டத்திற்கும் உகந்தவையாக, நேர்மையானதாக இருக்கின்றதா? விண்ணரசைக் குறித்த எமது எதிர்பார்ப்பும், தீர்மானங்களும் இறை சித்தத்திற்கு ஏற்றவையாக அமையட்டும். அவர் எமக்குள்ளே வாழுபவர். எனவே, ஆண்டவர் இயேசுவைத்தேடி அவரிடம் ஆலோசனை கேட்க நாம் வேறெங்கும் போகத் தேவையில்லை. எமக்கு நாங்களே சிறந்த நீதிபதிகள். இதுவே இன்றைய நற்செய்தி எமக்குத் தருகின்ற செய்தியாகும்.